விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 087 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 02 வியாழக்கிழமை (16.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829






# இலங்கை ஸ்தம்பிதம்



(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, வரி, வங்கி வட்டி வீதம் அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன் வைத்து 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட பணிப்புறக்கணிப்பால் இலங்கை நேற்று ஸ்தம்பிதமடைந்தது.

(11ஆம் பக்கம் பார்க்க)

## போராட்டம் தோல்வி

ஜனாதிபதி ஊடகப் பிரிவு

5 பக்கம் பார்க்க

பணிப் புறக்கணிப்பால்

## ஒரே நாளில் 46 பில்லியன் ரூபாய் இழப்பு

அரசு தெரிவிப்பு

5 பக்கம் பார்க்க

பாடசாலைகளின்

## கல்வி நடவடிக்கை முற்றாகப் பாதிப்பு

(கொழும்பு)

தொழிற்சங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக கல்வி நடவடிக்கைகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

வட மாகாணம் உட்பட நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் கல்வி நடவடிக்கை முற்றாக பாதிக்கப்பட்டிருந்தது.

ஒரு சில பாடசாலைகளில் மாணவர் 11

ஜனாதிபதி உறுதி

## பணிப் புறக்கணிப்பை தற்காலிகமாக கைவிடுவதற்கு தீர்மானம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய உறுதிமொழியையடுத்து பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையை இன்று காலை தற்காலிகமாகக் கைவிட தொழிற்சங்கங்கள் தீர்மானித்துள்ளன.

05

## மக்களை பகடைக்காயாக பயன்படுத்த வேண்டாம்

### தொழிற்சங்கங்களிடம் புத்திஜீவிகள் கோரிக்கை

(கொழும்பு)

மக்களை பணயக் கைதிகளாகப் பயன்படுத்தி தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுப்பது தொழிற்சங்கங்களின் பணியல்ல என்று புத்திஜீவிகளும் அரசியல் விமர்சகர்களும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

தமது உரிமைகளை வென்றெடுக்க 11

## போராட்டத்துக்கு தீர்வு தராவிட்டால் நாடு முழுவதும் முடங்கும் அபாயம்

### தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

எமது கோரிக்கைகளை ஆட்சியாளர்கள் முறையாகப் பரிசீலித்து தீர்வைத் தராவிட்டால் ஒட்டுமொத்த நாடும் முடங்கும் அபாயமிருப்பதாக தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றைய தினம் பொரளையில் முன்னெடுத்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மேற்கொண்ட ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கருத்துரைத்துள்ளனர்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர்கள்,

அனைத்து நிறுவன 11

## இலங்கை ஆசிரியர் சங்கம் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்




(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் நேற்று புதன்கிழமை யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை 11

இந்தியத் துணைத் தூதரக ஏற்பாட்டில்

## யாழில் மகளிர் தின நிகழ்வு



(யாழ்ப்பாணம்)

யாழ் இந்தியத் துணைத் தூதரகம் மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றது.

யாழ்ப்பாண கலா சார மண்டபத்தில் 11

## நிதி வழங்கினால் தேர்தல்

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

அரசாங்கம்நிதி வழங்கினால் தேர்தல் நடைபெறும் என் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலை நடத்துவதென்றால், பணம் மற்றும் தொடர்புடைய அமைப்புகளின் ஆதரவு தேவையென தெரிவித்துள்ளது.

(ம.7,9)

## யாழிலிருந்து தென்னிந்தியாவுக்கு விரைவில் விமான சேவை

### யாழ்.இந்தியத் துணைத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் ஊடாக தென்னிந்தியாவின் ஏனைய நகரங்களுக்கு விமான சேவையை ஆரம்பிப்பதற்கு ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம் என யாழ்ப்பாணத்திற்கான இந்தி 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாத சம்பளம் பெறும் போது வெட்கப்படுங்கள்

## கெமுனு விஜேரத்ன

(கொழும்பு)

தொழிற்சங்கத்தின் பணிப் புறக்கணிப்பு போராட்டம் தோல்வியடைந்துள்ளது. 24 ஆம் திகதி மாத சம்பளம் பெறும் போது வெட்கப்படுங்கள், பெறும் சம்பளத் திற்காவது அரச சேவையாளர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள இலங்கை தனியார் பேரூந்து உரிமையாளர் சங்கத்தின் காரியாலயத்தில் நேற்று புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்..

அவர் மேலும் குறிப்பிட்டதாவது.

குறுகிய அரசியல் நோக்கத்திற்காக தொழிற்சங்கத்தினர் முன்னெடுத்த 24 மணி நேர பணிபுறக்கணிப்பு போராட்டம் தோல்வி என்று குறிப்பிட வேண்டும். பொது போக்குவரத்து சேவை ஸ்தம்பிதமடைந்தால் மாத்திரமே போராட்டங்கள் வெற்றிபெறும்.

புகையிரத சாரதிகள் பணிப் புறக்கணிப்பு செய்ததால் புகையிரத சேவை முழுமையாக ஸ்தம்பிதமடையவில்லை. பெரும்பாலான புகையிரத தொழிற் சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் கலந்துக்கொள்ளவில்லை என்றார். (ம-7)

# தேர்தலுக்கான அச்சு நடவடிக்கைக்கு உடனடியாக பணம் வழங்குங்கள்

## அரச அச்சகம் திறைசேரிக்கு மீண்டும் கடிதம்

(கொழும்பு)

தேர்தலுக்கான அச்சு நடவடிக்கைகளுக்கு உடனடியாக பணம் வழங்குமாறு கோரி திறைசேரிக்கு மீண்டும் கடிதம் அனுப்பியுள்ளதாக அரச அச்சகம் அறிவித்துள்ளது.

திறைசேரியின் நடவடிக்கை பிரிவிற்கு குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே தெரிவித்தார்.

அந்த கடிதத்தின் பிரதியை தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவருக்கும் அனுப்பியுள்ளதாக அவர் கூறினார்.

அச்சு நடவடிக்கைகளுக்கான பணத்தை பெற்றுத்தருமாறு கோரி இதற்கு முன்னர் நிதி அமைச்சுக்கு கடிதம் அனுப்பிய போதிலும், அதற்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என அரச அச்சகர் தெரிவித்தார். (ம-7,9)

# சஹ்ரான் மனைவி பாத்திமாவுக்கு பிணை



(கொழும்பு)

2019 உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலின் பிரதான சூத்திரதாரியான சஹ்ரான் ஹாஷிமின் மனைவியான பாத்திமா ஹாதியாவிற்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை மேல் நீதி மன்ற நீதிபதி ஜெயராம் ட்ரொக்சி, கடும் நிபந்தனைகளின் அடிப்படையில் பாத்திமா ஹாதியாவிற்கு பிணை வழங்கி நேற்று உத்தரவிட்டுள்ளார்.

அதற்கமைய, 25 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும், தலா 25 இலட்சம் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்ல நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், வழக்கின் பிரதிவாதியான பாத்திமா ஹாதியாவும், பிணைதாரர்களும் வெளிநாடு செல்ல தடைவிதித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல் தொடர்பில் கைது செய்யப்பட்ட பாத்திமா ஹாதியா கடந்த நான்கு வருடங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

# எரிபொருள் விநியோகத்தில் எவ்வித பாதிப்பும் இல்லை

## ஜனாதிபதி ஊடகப்பிரிவு

(கொழும்பு)

எரிபொருள் விநியோகம் எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்படுவதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போது பல துறைகளில் தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளதால் சில நடவடிக்கைகள் முடங்கியுள்ளன.

இந்த நிலையில், எரிபொருள் விநியோகம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, போதுமான அளவு பெற்றோல் மற்றும் டீசல் கையிருப்பில் உள்ளதென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முறையத்தின் தலைவர் எம்.யூ.மொஹமட் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

தற்போது, 6,600 லீற்றர் பெற்றோல் மற்றும் டீசல் இருப்பை கொண்ட 300 தாங்கி ஊர்திகள் வழக்கமான எரிபொருள் விநியோகத்திற்காக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதென எம்.யூ.மொஹமட் அறிவித்துள்ளதாகஜனாதிபதி ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7,9)


ஓம் ஸ்ரீ சாயி ராம்

## பகவானுடன் ஐக்கியமானார்!



ஊராரை ஒன்று திரட்டி - நலிவடைந்திருந்த இந்து இளைஞர் மன்றத்தை புனரமைத்து 18 நாட்களில் நூல் நிலையத்தை அமைத்தவர்களுள் ஒருவர் - செயலாளர்! எமக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தவர்! மிகுந்த பண்புடையவர்! சிறந்த பொருளியல் ஆசான்! சாயி சமித்தியின் தொண்டர்!

தோற்றம் 04.04.1959

மறைவு 15.03.2023

அமரர் **வேலாயுதம் கருணாகரன்**

அவர்களின் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல பரம்பொருளை பணிகின்றோம்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(C-6164)

தங்க. முகுந்தன் குடும்பம் - மூளாய் 077 727 9239



## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றி வர்த்தகத் துறையின் வளர்ச்சிக்கு பெரும்பங் காற்றிய ஓய்வுபெற்ற பொருளியல் ஆசான்

அமரர் **வேலாயுதம் கருணாகரன்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(14912)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்



## மரண அறிவித்தல்

தோற்றம் 06 . 05 . 1946



மறைவு 15 . 03 . 2023

## சின்னப்பு தர்மலிங்கம்

இணுவில் 4ஆம் கட்டையடியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாவும் கொண்ட சின்னப்பு தர்மலிங்கம் அவர்கள் நேற்று புதன்கிழமை (15.03.2023) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற மார்க்கண்டு - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், லோகேஸ்வரி (விசி), சுதன், சுதாசினி, சுதர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், உமா, தர்மலிங்கம், காலஞ்சென்ற ராஜேஸ்வரன் (ராசன்), உருத்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (19.03.2023) அன்று அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இருளன் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(14915)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிப்பகிஷ்கரிப்பால் முடங்கியது நாடு

(யாழ்ப்பாணம்)

**அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாட ளாவிய ரீதியில் பல்வேறு கோரிக் கைகளை முன்னிறுத்தி பல தொழிற் சங்கங்கள் நேற்று ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெ டுத்திருந்தன.**

இதனால் வடக்கு மாகா ணத்தில் கல்விச் சேவை கள், மருத்துவ சேவைகள், வங்கிச் சேவைகள் என்பன முடங்கியிருந்தன.

இதேவேளை இலங்கை ஆசிரியர் சங்கம் நாடளா விய ரீதியில் போராட்டங் களை முன்னெடுத்திருந்தனர்.

சம்பள அதிகரிப்பை வழ ங்க கோரியும் வரி அறவீட் டினை நிறுத்த கோரியும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து குறித்த ஆர்ப் பாட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன.

மேலும் மருத்துவ சேவை கள் முடங்கியிருந்தமையால் நோயாளர்கள் பெரும் சிரமத் திற்கு உள்ளாகியிருந்த மை யும் குறிப்பிடத்தக்கது. (4-6-30-33-250-285-299-316)


கிளிநொச்சி


யாழ்ப்பாணம்




வவுனியா


மன்னார்


கொழும்பு

## மீண்டும் கடும் வீழ்ச்சியை சந்தித்த இலங்கை ரூபாய்

### மத்திய வங்கி வெளியிட்டுள்ள தகவல்

(கொழும்பு)

நேற்று முன்தினத்துடன் ஒப் பிடும் போது நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் மேலும் வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள தகவலில் குறிப் பிடப்பட்டள்ளது.

கடந்த மாதங்களுடன் ஒப் பிடுகையில் அமெரிக்க டொல ருக்கு நிகரான இலங்கை ரூபா வின் பெறுமதி கடந்த இரு வாரங்களில் சடுதியாக அதிக ரித்திருந்தது.எனினும் நேற்று முன்தினம் சிறு வீழ்ச்சி பதிவா னதுடன், நேற்று மேலும் வீழ்ச் சியடைந்துள்ளது. இதன்படி இலங்கை மத்திய வங்கி வெளி யிட்டுள்ள நாணய மாற்று விகி தங்களின்படி அமெரிக்க டொல ரின் விற்பனை விலை 344. 66 ரூபாவாகவும் கொள்வனவு விலை 327.59 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி)

## தொல்பொருள் திணைக்களத்தின் வசமானது திருமலை கன்னியா வெந்நீர் ஊற்று

(திருமலை)

திருகோணமலை கன்னியா வெந்நீர் ஊற்றின் வருமான முகாமைத்துவம் மற்றும் பரா மரிப்புப் பணிகள் தொல் பொருள் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இந்துக்களின் வரலாற்று தொல்பொருள் தளமான கன் னியா வெந்நீர் ஊற்றுப் பகு தியில், பௌத்த மயமாக்கல் பணிகள் முன்னெடுக்கப்பட் டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், கன்னியா வெந்நீர் ஊற்று தொல்பொருள் தளத்தை, அநுராதபுர காலத் தைச் சேர்ந்த பௌத்த இடிபா டுகளைக் கொண்ட தனித்து வமான இடமாக அடையாளம் காண முடியும் என தொல் பொருள் திணைக்களத்தின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

2010 ஆம் ஆண்டு முதல் கன்னியா வெந்நீர் ஊற்று, தொல்பொருள் திணைக்களத் தின் கட்டுப்பாட்டில் உள்ள தோடு, 2011 ஒக்டோபர் 9 ஆம் திகதியிட்ட அரச வர்த்தமானி பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக திருகோ ணமலை பட்டிணமும் சூழல் பிரதேச சபை, திருகோண மலை மாவட்ட செயலகம் என் பன கன்னியா வெந்நீர் ஊற் றின் வருமான முகாமைத்து வம் மற்றும் பராமரிப்பு பணி களை மேற்கொண்டு வந்தன.

இந்த நிலையில், தொல் பொருள் திணைக்களம் தலை யிட்டு கன்னியா வெந்நீர் ஊற் றின் மூலமாக கிடைக்கும் வருமானத்தை, திணைக்க ளத்தின் கணக்கின் ஊடாக அரச வருமானத்துடன் சேர்க் கும் நடவடிக்கையை முன்னெ டுத்துள்ளது.

கடந்த முதலாம் திகதி தொட க்கம், திருகோணமலை பிர தேச தொல்பொருள் திணை க்களம் வருமான முகாமைத்து வம் மற்றும் பராமரிப்பு பணிகளை ஆரம்பிக்கவுள்ள தாக தொல்பொருள் திணைக் களத்தின் ஊடகப் பிரிவு வெளி யிட்டுள்ள அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. (நி)

## இலங்கையில் மிக விரைவில் மிதக்கும் மின்னுற்பத்தி நிலையங்கள்

(கொழும்பு)

இலங்கையில் மிக விரை வில் முன்னோடி பரீட்சார்த்த முயற்சியாக மிதக்கும் மின்னுற் பத்தி நிலையங்கள் அமைக் கப்படவுள்ளன. இவ்வார அமைச் சரவைக் கூட்டத்தின் போது இதற் கான அனுமதி கிடைத்துள்ள தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இரத்தி னபுரி மாவட்டத்தின் சந்திரிக்கா வெவ மற்றும் மொனராகலை மாவட்டத்தின் கிரிஹிப்பன் வெவ ஆகிய குளங்களின் நீர்ப் பரப் பில் மிதக்கும் மின்னுற்பத்தி தட்டுகள் பொருத்தப்படவுள்ளன. குறித்த பரீட்சார்த்த முயற்சி வெற்றியளிக்கும் பட்சத்தில் இலங்கையின் முக்கிய நீர் நிலை களில் மிதக்கும் மின்னுற்பத்தி தட்டுகளை பொருத்தி சூரிய ஒளி மின்னுற்பத்திக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்து அணியை வீழ்த்தி வரலாறு படைத்தது பங்களாதேஷ்




இங்கிலாந்து அணிக்கு எதிரான இருபது-20 கிரிக்கெட் தொடரை 3-0 என்ற கணக்கில் வென்று பங்களாதேஷ் அணி புதிய சாதனை பண்டைத்துள்ளது.ஷேரே பங்களா நேஷனல் மைதானத்தில் நேற்று முன்தினம் இங்கிலாந்துக்கு எதிரான 3 ஆவது இருபது-20 கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி விளையாடியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து முதல் பட்டிங்கில் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்டுகளை மட்டும் இழந்து 158 ஓட்டங்கள் குவித்தது.

பங்களாதேஷ் அணியில் அதிகபட்சமாக லிட்டன்தாஸ் 73 ஓட்டங்களையும் சாண்டோ ஆட்டமிழக்காமல் 47 ஓட்டங்களும் சேர்த்து இருந்தனர்.

159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இங்கிலாந்து அணி சீரான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. முன்கள ஆட்டக்காரர்களான டேவிட் மாலன் 53 ஓட்டங்களும் ஜோஸ் பட்லர் 40 ஓட்டங்களும் குவித்தனர்.

இருப்பினும் அடுத்தடுத்து களமிறங்கிய வீரர்கள் ஓட்டங்களை குவிக்க தவறியதால், இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 142 ஓட்டங்கள் மட்டுமே குவித்தது.

இதன் மூலம் இங்கிலாந்து அணியை 16 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பங்களாதேஷ் அணி அபார வெற்றி பெற்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று, நடப்பு இருபது-20 சம்பியனான இங்கிலாந்து அணியை இருபது-20 தொடரில் ஒயிட் வாஷ் செய்து பங்களாதேஷ் வரலாறு படைத்துள்ளது.(4)

# எனது திறமை என்ன என்பதை நிரூபிக்க வேண்டிய தேவையில்லை

## விராட் கோலி

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகள் அகமதாபாத்தில் மோதிய 4 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் "டிரா" ஆனது. அவுஸ்திரேலியா முதல் இன்னிங்ஸில் 480 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா முதல் இன்னிங்ஸில் 571 ஓட்டங்கள் குவித்தது. இதனால் 4 போட்டிகளைக் கொண்ட தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த டெஸ்டில் 186 ஓட்டங்கள் குவித்த முன்னாள் கப்டன் விராட் கோலி ஆட்ட நாயகன் விருதை பெற்றார். 34 வயதான விராட் கோலி 1,205 நாட்களுக்கு பிறகு டெஸ்டில் சதம் அடித்தார். இதன் மூலம் தன்னை விமர்சித்தவர்களுக்கு பதிலடி கொடுத்தார்.

அதாவது தனது திறமையை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று விராட் கோலி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு வீரராக என் மீது நான் வைத்து இருக்கும் எதிர்பார்ப்புகள் முக்கியத்துவம் வாய்ந்தது. நாக்பூர் டெஸ்டில் முதல் இன்னிங்ஸில் இருந்தே நான் நன்றாக பட்டிங் செய்வது போல் உணர்ந்தேன். அணிக்காக முடிந்தவரை பட்டிங்கில் கூடுதல் கவனம் செலுத்தினேன். கடந்த காலங்களில் கொடுத்த அதே உழைப்பை இப்போதும் கொடுத்து வருகிறேன் எனத் தெரிவித்தார். (4)







நியாசன்





தனேஷ்




நிஷாந்





மயூரி




கோபினா




சகானா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கு இடமாற்றங்கள்; 24 இற்குப் பின் பணி நீடிக்கப்படாது

(கொழும்பு)


ஆசிரியர் இடமாற்ற சபையினால் வழங்கப்பட்ட இடமாற்றங்கள் நடைமுறையில் உள்ளதால் எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு பின்னர் பணி நீடிக்கப்படமாட்டாது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நிலவரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் கல்வி அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, ஆசிரியர் நியமனம் தொடர்பான உரிய அறிவுறுத்தல்கள் மார்ச் 24 ஆம் திகதி வரை மாகாண மற்றும் பிராந்திய பணிப்பாளர்களுக்கு முறையான கடித ஆவணம் மூலம் அறிவிக்கப்படும் என குறித்த அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# தொழிற்சங்க நடவடிக்கையால் ஒரே நாளில் 46 பில்லியன் ரூபாய் இழப்பு

## அரசாங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

தற்போதைய தொழிற்சங்க நடவடிக்கையால் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரே நாளில் 46 பில்லியன் ரூபாய் இழப்பு ஏற்படும் என அரசாங்கம் தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் நேற்று புதன்கிழமை பல தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்த தொழிற்சங்க நடவடிக்கை தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி)

# தொழிற்சங்கப் போராட்டத்தினால் அத்தியாவசிய சேவைகள் முற்றாக முடங்கவில்லை

## ஜனாதிபதி ஊடகப்பிரிவு

(கொழும்பு)

புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கல்வி, சுகாதாரம், புகையிரதம், மின்சாரம், பெற்றோலியம், துறைமுகம் உள்ளிட்ட பல சேவைகளைச் சார்ந்த துறைகள் நேற்று புதன்கிழமை வேலை நிறுத்த போராட்டத்தினை முன்னெடுத்திருந்தன.

எவ்வாறிருப்பினும் இந்த சேவைகள் முற்றாக முடங்கவில்லை என்றும், மக்களுக்கான சேவைகள் தடையின்றி வழங்கப்பட்டதாகவும் ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஒவ்வொரு துறைசார் பிரதானிகளை குறிப்பிட்டு ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது,

தொழிற்சங்க போராட்டத்திற்கு மத்தியிலும் ரயில்வே ஊழியர்களின் அர்ப்பணிப்புடன், பயணிகளின் வசதிக்காக 20 ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் இதேவேளை மக்கள் வங்கியின் 352 கிளைகளில் 330 கிளைகளில் 75 சதவீத ஊழியர்களின் வருகையுடன் வாடிக்கையாளர்களுக்கான சேவைகள் தடையின்றி வழங்கப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபையின் 107 டிப்போக்களிலும் வழமை போன்று கால அட்டவணையின் படி பேருந்துகள் சேவையில் ஈடுபட்டுள்ளன எனவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியால் கைவிடப்படும் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதி வழங்கிய உறுதிமொழியை அடுத்து தொழிற்சங்க நடவடிக்கையை இன்று வியாழக்கிழமை காலை முதல் கைவிட தொழிற்சங்க கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

அனைத்து கோரிக்கைகளையும் கவனத்தில் கொள்வதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்ததை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு பணிப்புறக்கணிப்பு தற்காலிகமாக கைவிடப்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (நி)

# தகவல் தொழில்நுட்பத்திற்கு தனி பல்கலைக்கழகம்



(கொழும்பு)

உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்தும் வகையில் கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கான தனியான பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டியது முக்கியமானது என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

அரச பல்கலைக்கழகங்களில் மாணவர் சேர்க்கை எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் உயர்கல்வி வாய்ப்புகளை விரிவுபடுத்துவது தொடர்பாக உரிய பரிந்துரைகளை வழங்குவதற்கான பாராளுமன்ற விசேட குழுவில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உயர்கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றங்கள் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளும் மேற்படி குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# போதிய போசாக்கு இன்மையே குழந்தையின் உயிரிழப்பிற்கு காரணம்

## பிரேத பரிசோதனை அறிக்கையில் தகவல்

(கரணவாய்)

பிறந்து 52 நாளேயான மணற்காடு, குடத்தனையைச் சேர்ந்த ஆண் குழந்தையின் இறப்பிற்கு போதிய போஷாக்கு இன்மையே காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் அதிர்ச்சி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி ஆண் குழந்தை மூச்சற்ற நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் தும்பளை திடீர் மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா விஞ்சன் தயான் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனை நேற்று புதன்கிழமை இடம்பெற்ற நிலையில் போதிய போசாக்கு இன்மை காரணமாக உயிரிழப்பு இடம்பெற்றதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-60)

# இராசிபலன்

16.03.2023
பங்குனி 02, வியாழக்கிழமை
நவமி பிற்பகல் 1.22 மணிவரை
பூராடம் பின்னிரவு- 1.46 மணிவரை
சுபநேரம் -7.50-9.20 மணிவரை
இராகுகாலம்- 1.50-3.20 மணிவரை
சந்திராஷ்டமம் -ரோகினி
மிருகசீரிடம்

வளவன்




சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும்.




உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், மருத்துவச் செலவுகள் குறையும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.




முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், விருப்பங்கள் நிறைவு பெறும் வாய்ப்புண்டு, சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.




குடும்ப பொறுப்புக்கள் அதிகரிக்கும் நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலை ஏற்படலாம்.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வாழ்க்கைத்தரம் உயர வழி வகை செய்வீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.




சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் உற்சாகம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அந்நிய தேசத் தொடர்புகள் எண்ணியபடியே கைகூடும், எதிர்பார்த்த தன வரவுகள் கைகூடும் வாய்ப்புண்டு.




குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.




சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழும் வாய்ப்புண்டு, பெற்றோர் மீது பிரியம் கூடும், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு, சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், தொழிலில் கூட்டாளிகளின் ஒத்துழைப்பு கிடைக்கும்.




தொழில் நலன் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் தேடி வந்து சேரலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.

துன்பம் நீங்க வேண்டுமாயின் கடவுளைத் தொழ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் கண்புரை சத்திர சிகிச்சைமேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளிகளுக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் நன்கொடையாளர்களின் உதவியுடன் இலவசமாக கண்புரை சத்திரசிகிச்சையினை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கான நோயாளர்களைத் தெரிவு செய்யும் மூன்றாவது கண்பரிசோதனை முகாம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் அனலைதீவு பிரதேச வைத்தியசாலை,அம்பன் பிரதேச வைத்தியசாலை மற்றும் மருதன்கேணி பிரதேச வைத்தியசாலை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

எனவே கண்புரை சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ள நோயாளர்கள் மேற்படி கண் பரிசோதனை முகாமில் கலந்து கொண்டு தங்கள் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளுமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (4-6-33-60)



யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தில் உயர்தரத்தில் கல்வி பயிலும் தேவைப்பாடுடைய 5 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பிற்கான ஆரம்பகட்ட நிதி உதவி கடந்த திங்கட்கிழமை வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

(படம்- சுபேசன்)

# பலாலியில் விடுவிக்கப்பட்ட பகுதிகளில் வீட்டுத்திட்டம் தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்பாணம் பலாலி பகுதியில் கடந்த மாதம் 3 ஆம் திகதி 108 ஏக்கர் காணிகள் மீள் குடியேற்ற வசதிகளை மேற்கொள்வதற்காக விடுவிக்கப்பட்ட நிலையில் தற்காலிக முகாம்களில் வசித்து வரும் குடும்பங்களின் மீள் குடியேற்றத்துக்கான திட்ட முன்னெடுப்புக்களை யாழ். மாவட்ட செயலகம் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம் முன்னெடுத்துவருகின்றது.



இந்நிலையில், விடுவிக்கப்பட்ட பலாலி பகுதிகளில் உள்ள மக்களின் மீள் குடியேற்றம் தொடர்பில் பார்வையிடும் முகமாகவும் தற்காலிக வீட்டு திட்டங்களை வழங்குவதற்கான சாத்தியப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்கும் றகாம நிறுவனம் மற்றும் நோர்வேயை தளமாக கொண்டு இயங்கும் போருட் நிறுவனம் இணைந்து நேற்று முன்தினம் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

தற்காலிக நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் மீள் குடியேற்றத்தை விரைவுபடுத்தும் முகமாகவும் மீள் குடியேற்ற மக்களின் வாழ்வாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் முகமாகவும் பிரதேச செயலகத்துடன் இணைந்து அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதார உதவிகளை மேற்கொள்வதற்கான மேற்பார்வை விஜயமாக குறித்த விஜயம் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

குறித்த விஜயத்தில் வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் சிவசிறி, றகமா நிறுவன பணிப்பாளர் மரிக்கார், நோர்வே போரூட் அமைப்பின் திட்ட அமைப்பாளர் அனா,பலாலிகிராம சேவகர் உட்பட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(4-6-104)

# தேர்தலிற்கு மதிப்பளித்து முக்கிய அபிவிருத்திகளை மக்கள் மயப்படுத்துவதை பின்தள்ளியுள்ளோம்

## வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷ்

(கொழும்பு)

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையினால் கடந்த காலப் பகுதியில் எம்மால் அடிக்கல்லிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றுக்கு தேர்தல் சட்ட விதி முறைகளுக்கு மதிப்பளித்து தற்போது திறப்பு விழாக்களை நடத்த முடியாதுள்ள போதும் அத்திட்டங்கள் பின்னரான திகதியில் மக்கள் மயப்படுத்தப்படும் என தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புத்தூரில் 15 மில்லியன் செலவில் அமைக்கப்பட்ட மீன் சந்தைக் கட்டுமானம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டு திறந்து வைக்கப்படும் நிலையில் உள்ளது.

இதற்கு மேலதிகமாக அங்கு 20 மில்லியன்கள் ஒதுக்கப்பட்டு மரக்கறிச்சந்தை மற்றும் இறைச்சிக்கடைத் தொகுதிக்கான ஆரம்ப கட்ட பணிகள் இடம்பெறுகின்றன.

அதுபோன்று நீர்வேலியில் வலிகாமம் கிழக்கிற்கான பொது சிறுவர் பூங்காவிற்குரிய வேலைகள் நிறைவடையும் தருவாயில் உள்ளன.

நீர்வேலி கந்தசாமி தேவஸ்தானத்தினால் வழங்கப்பட்ட நிலத்தில் கட்டுமானப்பணிகள் 3.4 மில்லியன்களில் பணிகளை தற்போது பூர்த்தி செய்துள்ளோம். அப் பூங்காவிற்குரிய விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவுக்கான நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதுபோன்ற திட்டங்கள் யாவும் வலிகாமம் கிழக்குப் பிரதேச மக்களின் வரிப் பணம், சோலைவரி, தண்டப்பணம், சர்வதேச மானிய உதவிகள் என பல்வேறுபட்ட நிதி மூலங்களில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளாகும்.

இவற்றை நாம் தேர்தல்களின் பின் கடந்த 13 ஆம் திகதி மக்கள் மயப்படுத்த சபையில் தீர்மானித்திருந்தோம். அதற்காக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனைகளையும் பெற்றிருந்தோம். எனினும் தேர்தல்கள் கடந்த 9 ஆம் திகதி நடைபெறாது மீள்வும் ஒத்திவைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியமையினால் தேர்தல் ஒழுங்குகளுக்கு அமைய திட்டங்களை மக்கள் மயப்படுத்தவில்லை. எனவே பின்னரான திகதி ஒன்றில் மேற்படி திட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்படும் என தெரிவித்தார். (4-6)

# செயற்பட்டு மகிழ்வோம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மழலைகள் பூங்காவில் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி நிர்வாகக்குழு தலைவர் இ. சேதுநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

# தெய்வீகத் திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரை நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இந்து சமய கலாசார அலுவல் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அனிருத்தனன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4-6)

# நெடுந்தீவு வெடியரசன் கோட்டையில் பௌத்த மயமாக்கல் முன்னெடுப்பு

(சாவகச்சேரி)

தமிழர்களுடைய வரலாற்றை திரிவுபடுத்தி அதனூடாக மேற்கொள்ளப்படுகின்ற பௌத்த மயமாக்கல் செயற்பாடுகளை உரிய அதிகாரிகள் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டுமென யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டைப் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற பௌத்த மயமாக்கல் செயற்பாட்டினை கண்டித்து வெளியிட்ட ஊடக அறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது வெடியரசன் கோட்டையின் எச்சங்களை பௌத்த தாது கோபுர எச்சங்களாக சித்தரித்து மேற்கொள்ளப்படவுள்ள பௌத்த மயமாக்கல் செயற்பாட்டிற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

நெடுந்தீவு தமிழர்களுடைய வரலாற்றை பறைசாற்றும் தலைசிறந்த சுற்றுலாத்தளம். இந்நிலையில் அங்கு திட்டமிட்டு பௌத்தமயமாக்கல் செயற்பாடு முன்னெடுக்கப்படுகிறது.

கோட்டை மற்றும் மாவிலி இறங்குதுறைப் பகுதிகளில் பிரதேசசபையின் அனுமதி இன்றி சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் நாட்டப்பட்டுள்ள விளம்பரப் பலகையை அகற்றி கோட்டையின் பாரம்பரியத்தையும் வரலாற்றையும் பேண உரிய அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கறைபடியாத வீரத் தமிழர் வரலாற்றுக்குள் பௌத்தத்தை திணிக்கும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதிகாரிகள் இனங்களுக்கிடையில் விரோதங்களை ஏற்படுத்தும் செயற்பாடுகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்றனர். நாட்டு மக்களுக்குள் குரோதங்களை ஏற்படுத்திவிட்டு ஒருபோதும் பொருளாதார மீட்சியைப் பெற முடியாது என்பதனை உரிய தரப்பினர் உணர்ந்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-30)

# யாழ்.மாவட்ட விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பெரும்போகத்தில் நெற் கொள்வனவு செய்யும் அரசாங்கத்தின் கொள்கைத்திட்டத்திற்கமைவாக விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்வனவு செய்து அரிசியாக்கி குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக வழங்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கமைவாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து 300 மெற்றிக்தொன் சிவப்பு மற்றும் வெள்ளை நாடு நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளன. எனவே நெல்லை விற்பனை செய்யவிரும்பும் விவசாயிகள் தமது கமக்கார அமைப்பின் ஊடாக தத்தமது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு நெல்லை விற்பனை செய்ய முடியும்.


ஆகக்கூடிய ஈரப்பதன் 14% மற்றும் ஆகக்கூடிய நெற்ப தரினளவு 9 % ஆகக் கொண்ட நெல் ஒரு கிலோகிராம் 100 ரூபாய்க்கும் ஈரப்பதன் 14% - 24% க்கு இடைப்பட்ட நெல் ஒரு கிலோகிராம்- 88 ரூபாய்க்கும் கொள்வனவு செய்யப்படும். மேலும் யாழ். மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வழங்குவதற்காக 2467.64 மெற்றிக்தொன் அரிசி தேவைப்பாடு காணப்படுகின்றது.

இத்தேவைக்காக 300 மெற்றிக்தொன் நெல்லை யாழ். மாவட்டத்தில் இருந்து கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்று என யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கல் சூளை புகையை சுவாசித்த 5 பேர் மூச்சுத்திணறி உயிரிழப்பு

## -இந்தியாவில் சோகம்-



(டில்லி)

செங்கல்சூளை புகையை சுவாசித்த 5 பேர் மூச்சுத்திணறி பலியான சம்பவம் இந்தியாவில் இடம்பெற்றுள்ளது

சத்தீஸ்கர் மாநிலம் மஹாசாமுண்ட் மாவட்டம் காந்த்புல்ஹர் கிராமத்தில் செங்கல் சூளை உள்ளது. இந்த செங்கல் சூளையில் நேற்று முன்தினம் இரவு செங்கலை சுட, தொழிலாளர்கள் தீ வைத்துள்ளனர்.

பின்னர், தொழிலாளர்கள் 6 பேர் செங்கல் சூளையில் தீ வைக்கப்பட்ட சுடு செங்கல் மேடை மீது படுத்து உறங்கியுள்ளனர். இந்நிலையில், நேற்றுக் காலை பிற தொழிலாளர்கள் செங்கல் சூளைக்கு வேலைக்கு சென்றுள்ளனர்.

அங்கு சக ஊழியர்கள் 6 பேர் படுத்து, கிடப்பதை பார்த்து அவர்களை எழுப்பியுள்ளனர். அப்போது, 5 பேர் உயிரிழந்த நிலையிலும் ஒரே ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையிலும் கிடந்ததை கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

இதையடுத்து, உடனடியாக அந்த நபரை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். மேலும், உயிரிழந்த 5 பேரின் உடலையும் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வரும் நிலையில் செங்கல்சூளையில் செங்கல் சூடுபடுத்த தீ வைத்துவிட்டு அதன் மேல் அடுக்கில் படுத்து உறங்கியதில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு உயிரிழந்துள்ளனர் என்று முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது. (நி)

## பங்களாதேஷில் நூற்றுக்கணக்கான குடிசை வீடுகள் எரிந்து நாசம்



(டாக்கா)

பங்களாதேஷில் நூற்றுக்கணக்கான குடிசை வீடுகள் எரிந்து நாசமடைந்துள்ளன.

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவில் உள்ள குனிபாரா பகுதியில் நூற்றுக்கணக்கான குடிசை வீடுகள் உள்ளன. இங்குள்ள ஒரு குடிசை வீட்டில் கடந்த திங்கட்கிழமை இரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டது. தீ மளமளவென அருகில் உள்ள குடிசை வீடுகளுக்கும் பரவியது. இது குறித்து தகவலறிந்த தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர்.

இந்த தீ விபத்தில் சுமார் 100 குடிசை வீடுகள் எரிந்து சாம்பலானது. பலரது உடைமைகள், மின்சாதனங்கள் இதில் கருகி சேதம் அடைந்தன. எனினும் அதிர்ஷ்டவசமாக உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (நி)

## இம்ரான்கானை கைது செய்ய முயற்சி பொலிஸாருடன் ஆதரவாளர்கள் மோதல்





(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கானை கைது செய்வதற்கு பொலிஸார் முயன்ற நிலையில், இம்ரான்கானின் கட்சி ஆதரவாளர்கள் பொலிஸாருடன் மோதல்களில் ஈடுபட்டனர்.

நீதிபதி ஒருவரை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டு தொடர்பான வழக்கில் இம்ரான்கானை கைது செய்வதற்கு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. இதனால், இம்ரான்கானை கைது செய்வதற்கு லாகூரிலுள்ள இம்ரான்கானின் வீட்டுக்கு பொலிஸார் சென்றனர். அப்போது, அங்கு திரண்டிருந்த கட்சி ஆதரவாளர்கள் பொலிஸாருடன் நேற்று முன்தினம் மோதல்களில் ஈடுபட்டனர். (நி)

# அதிக ஆயுதங்கள் இறக்குமதி; இந்தியா தொடர்ந்து முதலிடத்தில்

## சர்வதேச அமைதி ஆய்வு நிறுவனம் அறிக்கை



(ஸ்டாக்ஹோமை)

சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமை சேர்ந்த ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி, ஆய்வு நிறுவனம், ஆயுத ஏற்றுமதி, இறக்குமதி குறித்த வருடாந்திர அறிக்கையை கடந்த திங்கட்கிழமை வெளியிட்டது.

அதில் கூறியிருப்பதாவது கடந்த 2022 ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் அதிக ஆயுதங்களை ஏற்றுமதி செய்த நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது.

ஒட்டு மொத்த ஆயுத ஏற்றுமதியில் அமெரிக்காவில் இருந்து மட்டும் 40% ஆயுதங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு உள்ளன.

இரண்டாவது இடத்தில் ரஷ்யா உள்ளது. அந்த நாட்டில் இருந்து 16% ஆயுதங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இதுபோல அதிக ஆயுதங்களை இறக்குமதி செய்த நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது. ஒட்டுமொத்த ஆயுத இறக்குமதியில் இந்தியா மட்டும் 11% ஆயுதங்களை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்துள்ளது.

இந்தியாவுக்கு அதிக ஆயுதங்களை வழங்கிய நாடுகளில் ரஷ்யா 45 சதவீதத்துடன் முதலிடத்தில் இருக்கிறது. பிரான்ஸில் இருந்து 29%, அமெரிக்காவிடம் இருந்து 11% ஆயுதங்களை இந்தியா இறக்குமதி செய்திருக்கிறது.

பாகிஸ்தான், சீனாவின் அச்சுறுத்தல் காரணமாக இந்தியா அதிக ஆயுதங்களை இறக்குமதி செய்து வருகிறது. இதன் காரணமாக கடந்த 1993 ஆம் ஆண்டில் இருந்து சர்வதேச அளவிலான ஆயுத இறக்குமதியில் இந்தியா தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 120 | 150 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 |
| தக்காளி | 150 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 160 | 200 |
| கோவா | 100 | 100 | 120 |
| கரட் | 120 | 170 | 200 |
| பூசணி | 80 | 80 | 60 |
| புடோல் | 200 | 160 | 200 |
| வாழைக்காய் | 180 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 150 | 130 |
| பாகற்காய் | 450 | 600 | 500 |
| வெண்டக்காய் | 350 | 280 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 150 | 150 | 200 |
| லீக்ஸ் | 220 | 240 | 250 |
| பீற்றூட் | 200 | 220 | 200 |
| கறிமிளகாய் | 350 | 240 | 320 |
| முருங்கைக்காய் | 1800 | 1600 | 1500 |
| போஞ்சி | 200 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 140 | 80 | 130 |
| கீரை - 1 பிடி | 80 | 100 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 140 | 120 | 200 |
| முள்ளங்கி | 60 | 80 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 128





இச்சமயம் மலையமான் மகள் எழுந்து நிற்கவே, சின்னப் பழு வேட்டரையர், "இன்று அதிக நேரம் தங்களுக்குப் பேசும் சிரமம் கொடுத்து விட்டேன். மன்னிக்க வேணும். தேவி எச்சரிக்கை செய்யும் வரையில் நீண்டு விட்டது!" என்று சொன்னார்.

"தளபதி! இந்தப் பிள்ளை நம் விருந்தாளி. இவனுக்கு வேண்டிய வசதிகள் எசய்து கொடுங்கள். சக்கரவர்த்திக்கு மட்டும் உடம்பு சரியாயிருந்தால், இவனைத் தமது அரண்மனையிலேயே இருக்கச் சொல்லியிருக்கலாம்!" என்றாள் மலையமான் மகள்.

"நான் கவனித்துக் கொள்கிறேன் தாயே! தங்களுக்கு அந்தக் கவலை வேண்டாம். நன்றாய்க் கவனித்துக் கொள்கிறேன்!" என்றார் சின்னப் பழுவேட்டரையர். அப்போது அவரை அறியாமலே அவருடைய ஒரு கை மீசையைத் தொட்டு முறுக்கிற்று.

### முப்பதாம் அத்தியாயம்
### சித்திர மண்டபம்

சின்னப் பழுவேட்டரையர் வந்தியத்தேவனைத் தம்முடன் ஆஸ்தான மண்டபத்துக்கு அழைத்துப் போனார். சக்கரவர்த்தியிடம் அவன் கூறியது என்ன என்பதைப் பற்றி அவன் சொன்ன சமாதானம் அவருக்கு அவ்வளவாகப் பூரண திருப்தி அளிக்கவில்லை. சக்கரவர்த்தியைத் தனியாகப் போய்ப் பார்க்கும்படி அவனுக்கு அனுமதி அளித்தது ஒரு வேளை தவறோ என்றும் தோன்றியது.

ஆதித்த கரிகாலரிடமிருந்து வந்தவனாதலால், அவனைப் பற்றிச் சந்தேகிக்க வேண்டியது முறை. ஆனால் தமையனார் முத்திரை மோதிரத்துடன் அனுப்பியுள்ளபடியால் சந்தேகிக்க இடமில்லை. ஆகா! இம்மாதிரி காரியங்களில் பெரியவருக்கு வேறொருவர் ஜாக்கிரதை சொல்லித்தர வேண்டுமா, என்ன? ஆனாலும், தாம் திடீரென்று தரிசன மண்டபத்துக்குள் சென்ற பொழுது அவ்வாலிபன் தயங்கி நின்று பயந்தவன் போல் விழித்தது அவர் கண் முன்னால் தோன்றியது. "அபாயம்! அபாயம்!" என்று அவன் கூவியது நன்றாகக் காதில் விழுந்ததாக ஞாபகம் வந்தது.

"அபயம்" என்று சொல்லியிருந்தால், அது தம் காதில் "அபாயம்" என்று விழுந்திருக்கக்கூடியது சாத்தியமா? எல்லாவற்றுக்கும் இவனை உடனே திருப்பி அனுப்பாமலிருப்பது நல்லது.

தமையனார் வந்த பிறகு இவனைப் பற்றி நன்றாய்த் தெரிந்து கொண்டு பிறகு உசிதமானதைச் செய்யலாம். இம்மாதிரி தீரனாகிய வாலிபனை நாம் நம்முடைய அந்தரங்கக் காவற் படையில் சேர்த்துக் கொள்ளப் பார்க்க வேண்டும்.

சமயத்தில் உபயோகமாயிருப்பான். ஏன்? இவனுக்கு இவனுடைய முன்னோர்களின் பழைய அரசில் ஒரு பகுதியை வாங்கிக் கொடுத்தாலும் கொடுக்கலாம். இம்மாதிரி பிள்ளைகளுக்கு ஒருமுறை உதவி செய்து விட்டால், அப்புறம் என்றைக்கும் நமக்குக் கட்டுப்பட்டு நன்றியுடனிருப்பார்கள். ஒரு வேளை, இவன் உறுதியான விரோதி என்று ஏற்பட்டு விட்டால், அதற்குத் தக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எதற்கும் தமையனார் வந்து சேரட்டும் பார்க்கலாம்.

ஆஸ்தான மண்டபம் சென்றதும் வந்தியத்தேவன் அப்புறமும் இப்புறமும் ஆவலுடன் பார்க்கத் தொடங்கினான். தளபதியிடம் தான் ஓலையை எடுத்துக் கொடுத்த இடத்தில் உற்று உற்று நன்றாகப் பார்த்தான். தப்பித் தவறி இன்னொரு ஓலை, அந்த முக்கியமான ஓலை கிடக்கிறதா என்றுதான்.

அதை மட்டும் கண்டுபிடிக்க முடியாவிட்டால், தன்னைப் போன்ற மூடன் வேறு யாரும் இருக்க முடியாது. உலகமே புகழும் சோழ குலத்து அரசிளங்குமரியைத் தான் பார்க்க முடியாமலே போய் விடும். ஆதித்தகரிகாலர் தன்னிடம் ஒப்புவித்த பணியில் சரி பாதியைச் செய்ய முடியாமலே போய்விடும்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## விலங்குகள் பேசுவது புரிந்தால்

(நேற்றைய தொடர்ச்சி)

எல்லோரும் சோகமாக இருக்கின்றனர். இந்தச் சூழலில் நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயே? இது நியாயமா? என்று கேட்டது.

அதற்குச் சேவல், நம் அரசர் பெரிய முட்டாள். அவருக்கு இருப்பது ஒரே ஒரு மனைவி. அவளுக்காக உயிரை விடத் துணிந்துள்ளார்.

எனக்கு எத்தனை மனைவிகள் இருக்கிறார்கள் நீயே பார். என் பேச்சைக் கேட்டுத்தான் அவர்கள் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்குத் தண்டனை தருவேன். மனைவிக்காக இந்த அருமையான உயிரை நான் இழக்க மாட்டேன் என்று பதில் சொன்னது.



இந்தச் சிக்கலிலிருந்து அரசர் உயிர் பிழைக்க வழி இருக்கிறதா? என்று கேட்டது நாய்.

அரசர் மட்டும் அரசியிடம் உன்னைச் சவுக்கால் நூறு அடி அடிப்பேன். அதன் பிறகுதான் உண்மையைச் சொல்வேன் என்று சொல்லட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...றது சேவல்.

நாயும்சேவலும்பேசிக் கொண்டிருந்ததை ஒன்று விடாமல் கேட்டான் அரசன். அரண்மனை திரும்பினான் அவன்.

மாலை நேரம் வந்தது. அவன் அருகே வந்த அரசி, இப்பொழுது உண்மை யைச் சொல்கிறீர்களா? என்று கேட்டாள்.

நீ முதலில் சவுக்கால் நூறு அடி பெற வேண்டும். அதன் பிறகு நான் உண்மையைச் சொல்லிவிட்டு இறந்து விடுவேன் என்றான் அரசன்.

நான் சவுக்கடி பெற்றுக் கொள்கிறேன். எப்படியும் உண்மை தெரிந்தாக வேண்டும் என்றாள் அவள்.

அறைக்குள் அவளை அழைத்துச் சென்றான் அரசன். கையில் சவுக்கை எடுத்த அவன் அவளை ஓங்கி அடித்தான்.

பத்து அடியைக் கூட அவளால் தாங்க முடியவில்லை. மென்மையான அவளுடைய உடலிலிருந்து குருதி கசியத் தொடங்கியது.

ஐயோ! போதும் அடிப்பதை நிறுத்துங்கள். உங்கள் உண்மையும் வேண்டாம். சவுக்கடியும் வேண்டாம் என்று அலறினாள் அவள்.

சவுக்கால் அடிப்பதை நிறுத்தினான் அவன்.

அதன்பிறகு இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

(முற்றும்.)

வெறுப்பது யாராக இருந்தாலும் நேசிப்பது நீங்களாக இருங்கள். ~ அன்னை தெரசா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மதமாற்றம் செய்கின்ற பாவத்தைச் செய்யாதிருமின்!

நாம் பிறந்த நாட்டை தாய் நாடு என்கி றோம்.

எந்த மொழி நம் பிறப்பு மொழியாக இருக் கிறதோ அதை தாய்மொழி எனக் கூறுகின் றோம்.

இதேபோன்று நாம் பிறப்பால் எந்தச் சம யத்தைக் கொண்டுள்ளோமோ அது தாய்ச் சமயமாகிறது.

ஆக, தன் தாய் நாட்டை, தன் தாய் மொழியை ஒருவர் மறப்பாராயின், அவர் பெற்ற தாயை மறக்கவல்லவர் என்பதுதான் அதன் பொருளாகும்.

இதேநிலைதான் தன் தாய்ச் சமயத்தை விட்டு இன்னொரு சமயத்துக்கு மாறுகின்ற செயலாகும்.

ஆம், சமயம் என்பது நம் பிறப்போடு சார்ந் தது.

எங்ஙனம் எங்கள் பிறப்பு மொழி தாய் மொழி என்று போற்றப்படுகிறதோ அதே போன்று நம் பிறப்புச் சமயம் நம் தாய்ச் சமயம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

ஒருவர் எத்தனை மொழிகளைக் கற்றா லும் அதற்காக அவர் தன் தாய்மொழியை ஒருபோதும் மறக்கவோ அதனை இழிவுபடுத் தவோ மாட்டார்.

இதற்குக் காரணம் தாய்மொழி தவிர்ந்த எந்த மொழியைக் கற்றாலும் அந்த மொழி தாய்மொழியை இழிவுபடுத்துகின்ற பிரசா ரத்தை ஒருபோதும் செய்வதில்லை.

மாறாக, என் தாய் மொழிக்கு மேலாக, இன்னும் இரண்டு மொழிகளைக் கற்று ணர்ந்துள்ளேன் என்று பெருமைப்படுகின்ற அளவிலே அந்த நிலைமை அமைகிறது.

ஆனால் மதம்மாறுகின்றவர்கள் மதம் மாறுவது மட்டுமல்ல தன் தாய்ச் சமயத்தை - தன் முன்னோர்கள் கலாகாலமாக பின்பற்றி வந்த சமயத்தை இழிவுபடுத்துகின்றனர்.

அச்சமயம் போற்றுகின்ற தெய்வங் களைச் சாத்தான்கள் என்று பிரசாரம் செய் கின்றனர் எனில், இவர்களின் மனநிலை எவ்வாறாக உள்ளதென்பதை ஒருகணம் நாம் சிந்திக்க வேண்டும்.

ஆம், இலங்கை அந்நியரின் ஆட்சிக்குட் பட்டபோது, மதப் பரப்புரை என்பது கண்டபாட் டில் நடந்தன.

இதனால் பெரும் பாதிப்பை சைவ சமயம் சந்தித்தது.

அதிலும் குறிப்பாக மதம் பரப்பும் அமைப் புகள் வட மாகாணத்துக்கு வருகை தந்து மதம்சார் பாடசாலைகளை அமைத்தன.

அந்தப் பாடசாலைகளில் கல்வி கற்ப தாயின், தமது சமயத்துக்கு மாற வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது.

என்ன செய்வது கல்வி கற்பது மிகவும் அவசியம் என்ற அடிப்படையில் ஒரு தரப்பி னர் சைவ சமயத்திலிருந்து மதம் மாறினர்.

எனினும் அகத்தால் சிவனையும் புறத் தால் அந்நிய மதத்தையும் பின்பற்றுகின்ற நிலைமை இருந்தது.

இது அந்நியராட்சியில் நடந்ததென்றால் இப்போதும் மதம் மாற்றுகின்ற கொடுமை நம் மண்ணில் நடக்கிறதெனும்போதுதான் வேதனை நெஞ்சை அடைக்கிறது.

ஓ அன்புக்குரியவர்களே! மதம் மாற்றுகின்ற பாவத்தை ஒருபோதும் செய்யாதீர்கள். அது உங்களையும் உங்கள் சந்ததியையும் பாதிக் கும்.

யார் யார் எச் சமயத்தில் இருக்கிறார்களோ அச்சமயத்தை பின்பற்றுவதற்கு இடையூறு செய்யாதீர்கள்.

வீடு வீடாகச் சென்று மதம் பரப்பாதீர்கள். கடவுளில் நீ, நான் என்ற பேதம் ஏது.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று ணர்ந்து கொள்ளுங்கள். அதுவே இன்றைய தேவையாகும்.

# வடக்கு மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடல்

(நீர்கொழும்பு)

வடபகுதி மீனவர்கள் முகம் கொடுக்கும் பிரச் சினைகள் தொடர்பாக தென்னிலங்கையிலுள்ள சிவில் அமைப்புகளிற் கான கலந்துரையாடல் ஒன்று நேற்று நீர்கொழும் பில் இடம்பெற்றுள்ளது.

தேசிய மீனவ ஒத்து ழைப்பு இயக்கத்தின் ஏற் பாட்டில், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் திட்ட இணைப்பாளர் அன்டனி ஜேசுதாசன் மற் றும் தேசிய அமைப்பாளர் ஏமன்குமார் தலைமை யில் இடம்பெற்றுள்ளது.

மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவ ட்டங்களின் மீனவ தலை வர்கள் மற்றும் மீனவ பெண்கள் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத் தின் மாவட்ட இணைப்பா ளர்கள் ஆகியோர் கூட்டத் தில் கலந்து கொண்டனர்.

மேலும், கொழும்பு மற் றும் நீர்கொழும்பினை அண்மித்து அத்துடன் தென் னிலங்கையினை தள மாகக் கொண்டு தேசிய ரீதி யாக செயற்படுகின்ற சிவில் அமைப்புக்கள், மனித உரிமை செயற்பாட்டாளர் கள் மற்றும் பெண் அமைப் புக்களும் கலந்துரையாட லில் பங்குபற்றின.

இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பு, சட்ட விரோ தமான மீன்பிடி முறை, பருவகால மீன்பிடி முறை, மீனவ பெண்கள் முகம் கொடுக்கும் பிரச்சினை கள், மீனவ வளங்கள் மற்றும் துறைகள் அபிவி ருத்தி செய்யப்படாமை, இராணுவ காணி ஆக்கிர மிப்பும் ஆக்கிரமித்த காணி களை மீள வழங்கப் படாமை தொடர்பாகவும் கருத்துக்கள் முன்வைக் கப்பட்டன.

யுத்தத்தினால் பாதி க்கப்பட்ட நிலையிலுள்ள வடபகுதி மீனவர்களின் பிரச்சினைகளை அவர் களிற்குரியதாக மட்டும ன்றி அதனை தேசிய மீனவ பிரச்சினைகளாக நோக்கி தீர்வினை காண வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது.

மேலும், இந்திய மீன வர்களின் பிரச்சினைகள் தொடர்பாக காலத்திற்கு காலம் எடுக்கப்படும் தீர்க்கமற்ற முடிவுகள் கேலிக் கூத்தானது என வும் இந்திய இழுவை மடிக்கு அனுமதி பெற்று கொடுப்பதாக கடற்றொழில் அமைச்சர் மற்றும் வெளி யுறவு அமைச்சர் ஆகி யோர் கூறியிருப்பதற்கு கண்டனமும் வெளியிட் டுள்ளனர்.

அவ்வாறு அனுமதி வழங்கப்படும் போது கரையோரப் பகுதிக்கு வருகை தருகின்ற இந் திய மீனவர்களினால் கலாசாரம், சமூகம் மற்றும் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளை வட மாகாண பெண்களும் சந்திக்க நேரிடும் எனவும் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. (ம-7,9,104)

# பதவிகள் மாறியதும் தீர்மானங்களில் மாற்றம்

## எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

தற்போதைய ஜனாதி பதி எதிர்க்கட்சி உறுப் பினராக இருந்த போது, சர்வதேச நாணய நிதிய த்துடன் மேற்கொள்ளப் பட்ட கொடுக்கல் வாங் கல்கள் மற்றும் உடன்படி க்கைகள் பாராளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அப்போது நிதி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்சவிடம் கோரி னார்.

தற்போது ரணில் விக் கிரமசிங்க அவர்கள் ஜனா திபதியான பின்னரும் கூட சர்வதேச நாணய நிதி யத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை தற்போது மறைத்து வருகின்றார் தமது பதவிகள் மாறியதும் தீர்மானங்களிலும் மாற் றம் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி வித்தார்.

மஹர பிரதேசத்தில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்ற மக்கள் சந் திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவி க்கையில்,

சட்டமன்றம், நிறை வேற்று மற்றும் நீதித் துறை ஆகியவை இணை ந்து செயல்பட்டாலும், நாட் டில் தற்போது சர்வாதிகார நிறைவேற்று அதிகாரமே ஆட்சிமுறையிலுள்ளதாக வும் அதன் மூலம் உயர் நீதிமன்றத்தையும், நீதிப திகளையும் அவமதித்து மிதிக்கும் நிலைக்கு நாட்டு ஆட்சியாளர்கள் வந்துள் ளனர் எனவும் நீதிமன் றத் தீர்ப்புகளைக்கூட சவாலுக்குட்படுத்துவதன் மூலம் அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்ட மக்களின் வாக்குரிமைக்கு கூட சவால் விடுக்கப் படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஒரு நாடு என்ற வகை யில் நாம் ஒரு திருப்பு முனையை எதிர்கொண் டுள்ளோம் என்றாலும், தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான யானை, காக்கை, மொட்டு அரசா ங்கம் இதற்கு இடமளிப்ப தாக இல்லை எனவும் இந்தத் திருப்புமுனையை அரசாங்கம் எதிர்கொண் டால் அவர்களுக்கு எந்த உத்தரவாதமும் இல்லாது போகும் என்றும் எதிர்க் கட்சித் தலைவர் தெரிவித் தார்.

மக்கள் விரோத, மக் கள் எதிர்ப்பு, ஒடுக்கு முறைசார் இந்த அரசாங் கம், வரி விதித்து, பொருட் களின் விலையை உயர் த்தி பொருளாதாரத்தைச் சுருக்கி வருவதாகவே செயல்படுத்தி வருவதாக வும், பொருளாதாரத்தை விருத்தி செய்து, மக்களின் கைகளில் பணம் செல் வதற்கான வழிகளை உருவாக்குவதும் தான் நடக்க வேண்டிய செயல் பாடு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கேள்வியை குறைப்ப தற்காக இந்த வரிச் சுழற்சியை அரசாங்கம் செயல்படுத்தி வருவதாக வும், இதனால் பணவீ க்கம் குறைவடைந்து நாடு இயல்பு நிலைக்கு மீளும் என நினைத்தாலும் அது உண்மையில் தவறான செயல் எனவும் எதிர்க் கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

நாட்டில் பொருட்களின் விலை அதிகரித்தாலும் அது ராஜபக்ஷ குடும்பத் திற்கோ அல்லது அவர் களின் ஆதரவாளர்களு க்கோ அது பிரச்சினையாக அமையாது எனவும்,220 இலட்சம் மக்களுக்குமே அது பிரச்சினையாக அமைவதாகவும் எதிர்கட் சித் தலைவர் தெரிவித் தார். (ம-7,9)

# சீனாவுடனான நட்புறவு மேலும் வலுப்படுத்தப்படும்

## பிரதமர் தினேஷ் குணவர்தன

சீனாவிற்கும் இலங் கைக்கும் இடையிலான நட்புறவை மேலும் வலுப் படுத்துவதற்கு நடவடி க்கை மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித் துள்ளார்.

சி-ஜின்பிங் மூன்றா வது தடவையாக சீன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டதை அடுத்து அவருக்கு அனுப்பிய வாழ் த்து செய்தியில் பிரதமர் இதனை குறிப்பிட்டுள் ளார்.

சீன ஜனாதிபதியின் புதிய பதவிக் காலம் நாட்டு மக்களுக்கு மாத்திரமன்றி உலகளாவிய மக்களுக் கும் சிறப்பாக அமையும் என்று நம்புவதாக பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

# சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் கைது

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரி விற்குட்பட்ட விடத்தற் பளை பகுதியில் நேற்று புதன் கிழமை காலை சட்டவிரோத மணல் அக ழ்வில் ஈடுபட்ட நபர் ஒரு வர் கைது செய்யப்பட்ட துடன் மணல் அகழ்விற்கு பயன்படுத்தப்பட்ட உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட் டுள்ளது.

கொடிகாமம் இராணு வத்தினர் மேற்கொண்ட ரோந்து நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டு பொலிஸாரி டம் ஒப்படைக்கப்பட்டுள் ளார்.

இது தொடர்பான மேல திக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (4-6-30)

# ஐக்கிய இராச்சியத்துடன் இலங்கை புதிய வர்த்தகத் திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய இராச்சியமா னது இலங்கையில் புதிய வர்த்தகத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளது.

இதனை, கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்த வர்த்தகத் திட் டமானது இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படும் எனவும் கூறப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தின் கீழ் 92% வீதமான தயாரிப் புகளுக்கு வரி விதிக்கப்பட மாட்டாது எனவும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







யாழ். இந்திய உதவித்தூதரகத்தின் ஏற்பாட்டில் உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட சிறப்பு மகளிர் தின பட்டிமன்றம் நேற்று முன்தினம் மாலை யாழ். இந்திய மத்திய கலாசார நிலையத்தில், யாழ். இந்திய உதவித்தூதரகத்தின் உதவித்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது தென்னிந்திய பிரபல பட்டிமன்றபேச்சாளர் திருமதி கவிதாஜவகரை நடுவராக கொண்டு 'இளம் சமூதாயத்தை வழிநடத்த வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு, அல்லது சமூகத்திற்கே' என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெற்றது.

இதில் பெற்றோர்கள் என்ற அணியில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன், யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை விரிவுரையாளர் திருமதி மதன் கோசலை மற்றும் எதிர்வாதிகளாக சமூகமே என்ற அணியில் வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக துணைசார்ந்த விரிவுரையாளர் செல்வி கு.தயாளினி கலந்துகொண்டு தத்தமது கருத்துக்களை வழங்கினர்.

(படங்கள்:-கஜிந்தன், சிவசாந்தன்)



தமிழகத்தின் பிரபல பேச்சாளர் திருமதி.கவிதா ஜவகர் நூற்றாண்டு காணும் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியம் என்ற பொருளில் நேற்றுக்காலை சிறப்புரை ஆற்றினார். இதன் போது கலாசாலை சமூகத்தினர் அவரை பொன்னாடை போர்த்தியும் நினைவுச் சின்னம் வழங்கியும் கௌரவித்தனர்.

(படம்:-சிவசாந்தன்)

# மன்னாரில் இருந்து கல்வாரிக்கு பாதயாத்திரை ஆரம்பம்



(மன்னார்)

மன்னார் மறை மாவட்டத்தில் இருந்து வருடா வருடம் ஏற்பாடு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் வவுனியா கோமரசங்குளம் கல்வாரிக்கான பாதயாத்திரை நேற்று புதன் கிழமை காலை ஆரம்பமாகியுள்ளது.

கத்தோலிக்கர்கள் வருடந்தோறும் அனுசரித்து வரும் தவக் காலத்தை முன்னிட்டு மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்கர்கள் வவுனியாவில் உள்ள கோமரசன்குளம் கல்வாரிக்கு பாதயாத்திரை செல்வது வழமை.

மன்னார் மறைமாவட்டம் இன்றி வவுனியா மாவட்டத்தை சேர்ந்த கத்தோலிக்கர்களும் கலந்து கொள்வார்கள்.

இந்த நிலையில் நேற்று புதன்கிழமை மன்னாரில் இருந்து ஆரம்பமான குறித்த பாதயாத்திரையில் மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த பல நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று காலை திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் இருந்து பாதயாத்திரை ஆரம்பமானது.

குறித்த பாதயாத்திரையில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், மன்னார் மறைமாவட்ட கத்தோலிக்க இளைஞர்·ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் மன்னார் தூய செபஸ்தியார் பேராலய பங்குத்தந்தை அருட்தந்தை அகஸ்ரின் புஸ்பராஜ் வாழ்வுதயம் இயக்குநர் அருட்தந்தை அன்ரனி அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர். (4-6-285)

## மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு வவுனியாவில் எரிபொருள் விநியோகம்

(வவுனியா)

வவுனியாவில் காலபோக நெற்செய்கைக்காக விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் டீசல் விநியோகம் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியாவில்கமநல சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் டீசல் வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அந்தவகையில் 180 விவசாயிகளுக்கு நேற்று முன்தினம் இறம்பைக்குளத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக டீசல் வழங்கப்பட்டது. (4-6)

## பெண் தலைமைத்துவ குடும்பங்களின்

# வாழ்வாதாரத்தினை ஊக்குவிக்கும் கண்காட்சியும் விற்பனையும்



(யாழ்ப்பாணம்)


வடமாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் யாழ். இந்திய உதவித்தூதரகத்தின் இணைந்த ஏற்பாட்டில் உலக மகளிர் தினத்தினை முன்னிட்டு பெண் தலைமைத்துவ குடும்பங்களின் பொருளாதாரத்தினை வலுப்படுத்தும் மகளிர்களின் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் யாழ். கலாசார மண்டபத்தில் நேற்று வடமாகாண் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் திருமதி ரூபினிவரதலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, சிறப்பு விருந்தினராக யாழ். இந்திய உதவித் தூதரகத்தின் உதவித்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் கலந்து கொண்டு உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையையும்நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தனர்.

இதில் வடமாகாணத்தில் மகளிர் விவகார அமைச்சினால் தெரிவு செய்யப்பட்ட 38 பெண் தலைமைத்துவ குடும்பங்களின் உற்பத்திப் பொருட்கள் இதனபோது காட்சிப்படுத்தப்பட்டன. (4-6-104)

# நாகர் கோவிலில் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீச்சு

## இரு மோட்டார் சைக்கிள் எரிந்து நாசம்



(கரணவாய்)

வடமராட்சி நாகர்கோவில் மேற்கு பகுதியில் வீடு ஒன்றின் மீது நள்ளிரவு நேரம் நடத்தப்பட்ட பெற்றோல் குண்டு தாக்குதலில் முன்பக்க வீடு சேதமடைந்துள்ளதுடன் இரண்டு மோட்டார் சைக்கிள் எரிந்து நாசமாகி உள்ளன.

மேற்படி சம்பவம் நேற்று புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அதிகாலை வேளை இனம் தெரியாத நபர்கள் இப் பெற்றோல் குண்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அப்பகுதியில் மயானம் ஒன்றிற்கு மதில் அமைப்பது தொடர்பான இரு பகுதியினருக்கு இடையே ஏற்பட்ட பிரச்சினை தொடர்பில் காங்கேசந்துறை பிராந்தியத்துக்கு பொறுப்பான உதவி பொலிஸ் அத்தியட்சகர் நாகர்கோவில் பகுதிக்கு சென்று அப்பகுதி மக்களுடன் கலந்துரையாடி மதில் அமைப்பதை தற்காலிகமாக நிறுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

இந் நிலையில் இதன் தொடர்ச்சியாகவே பெற்றோல்குண்டு தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(4-6-60-104-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி நடவடிக்...

கள் வருகைதந்து திரும்பிச்சென்றதை காணமுடிந்தது.

வரி அதிகரிப்பு, மின்சாரக் கட்டணம் அதிகரிப்பு, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இணைந்து பணிப் புறக்கணிப்பினை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## மக்களை பகடைக்...

தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் உரிமை தொழிற்சங்கங்களுக்குக் காணப்படுகின்றது.

ஆனால், மக்களின் அடிப்படை உரிமைகளை மீறி, அவர்களை சிரமத்திற்கு உள்ளாக்கும் அதிகாரம் எவருக்கும் வழங்கப்படவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

மின்சாரம், எரிபொருள் என்பன தொடர்ச்சியான முறையில் வழங்கப்படுகின்றன. அத்தியாவசியப் பொருட்களின் விலையும் தற்சமயம் குறைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் இலங்கையின் மீது சாதகமான நிலைப்பாட்டுடன் செயற்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

திட்டமிட்ட அடிப்படையில் முறையான இலக்கை நோக்கி நாடு பயணித்து வரும் வேளையில் அதனை சீர்குலைப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் புத்திஜீவிகளும் அரசியல் விமர்சகர்களும் வலியுறுத்தியுள்ளார்கள்.

இதேவேளை, தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக மக்களை பகடைக்காயாக பயன்படுத்தும் தொழிற்சங்கங்களை நாட்டின் வரலாற்றில் அவதானிக்க முடிந்ததாக சிரேஷ்ட சட்டத்தரணி யூ.ஆர். டி சில்வா வலியுறுத்தியுள்ளார். (ம-7)

## இலங்கை ஆசிரி...

முன்னெடுத்தனர்.

சம்பள அதிகரிப்பை வழங்க கோரியும், வரி அறவீட்டினை நிறுத்த கோரியும் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைகளில் பதாகைகளை தாங்கியவாறு 20000 உதவித் தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

மூன்றில் இரண்டு பங்கு சம்பளத்தை வழங்க வேண்டும், மாணவர்களின் போசனைக் குறைபாட்டை நிவர்த்தி செய்!, பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்களை கொடு உள்ளிட்ட பல்வேறு பதாகைகளை தாங்கியவாறு கோஷம் எழுப்பி ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர். (ம-7,9,33,104)

## போராட்டத்துக்கு...

ஊழியர்கள் சங்க தலைவர் வசந்த சமரசிங்க வர்த்தமானி அறிவித்தல் விடுத்து தொழிற்சங்கப் போராட்டங்களை கட்டுப்படுத்த முடியாது என்றும் மின்சாரக் கட்டணங்களை குறைத்தல், வரிகளை குறைத்தல் உள்ளிட்டவை தொடர்பிலேயே வர்த்தமானி வெளியிடப்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டினர்.

மேலும் அவற்றைச் செய்யாது இந்த அரசாங்கம் போராட்டங்களினைத் தடுக்க முனைவதனூடாக பாரதூரமான விளைவுகளை சந்திக்க வேண்டும்.

எதிர்காலத்தில் அனைத்து தொழிற்சங்கங்களையும் ஒன்றிணைத்து நாட்டை முற்றாக முடக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என அரசாங்கத்தினை எச்சரித்தனர். (ம-7)

## இலங்கை...

வரி, வங்கி வட்டி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்வைத்து தொழிற்சங்கங்கள் பணிப் பகிஷ்கரிப்பில் நேற்று ஈடுபட்டன.

உழைக்கும்போது செலுத்த வேண்டிய வரிக்கொள்கைக்கு எதிராக தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பை சேர்ந்த 47 சங்கங்கள் ஒருநாள் பணிப்பகிஷ்கரிப்பில் நேற்று பங்கேற்றன.

இதனிடையே, ஒரு நாள் பணிப் பகிஷ்கரிப்பில் பங்கேற்ற துறைமுக தொழிற்சங்கங்கள் கொழும்புத் துறைமுகத்திற்குள் மோட்டார் சைக்கிள் பேரணியொன்றை முன்னெடுக்க முயற்சித்தபோது கடற்படையினர் அதனை தடுத்தனர். இதனால் வாக்குவாதம் ஏற்பட்டது.

துறைமுக ஊழியர்கள் கடற்படையினரின் இடையூறுகளுக்கு மத்தியிலும் துறைமுகத்திற்குள் பிரவேசித்தனர். பின்னர் ஊழியர்களுக்கும் துறைமுக நிர்வாகத்தினருக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதேவேளை, பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட அரச, அரச தனியார் கூட்டு நிறுவன தொழிற்சங்க ஒன்றியம் பொரளை சந்தியில் நேற்று முற்பகல் எதிர்ப்பில் ஈடுபட்டது.

வங்கிக் கடன் வட்டி வீதத்தை குறைத்தல், 20 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவு கொடுப்பனவை வழங்குதல், மின்சாரக் கட்டணத்தை குறைத்தல், சம்பள, ஓய்வூதிய குறைப்பை உடன் நிறுத்துவது உள்ளிட்ட கோரிக்கைகளை அவர்கள் வலியுறுத்தினர்.

இதேவேளை, ஆசிரியர்கள் - அதிபர்கள் முன்னெடுத்த பணிப்பகிஷ்கரிப்பினால் அரச பாடசாலைகளில் நாளாந்த செயற்பாடுகள் இடம்பெறவில்லை.

கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, புத்தளம், கண்டி ஆகிய மாவட்டங்களின் வைத்திய சாலைகளிலும் தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதனால், நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கக் கூட்டணியினரும் பணிப் பகிஷ்கரிப்பில் நேற்று இணைந்து கொண்டனர். இதன் காரணமாக தபால் நிலையங்களின் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

அரச வங்கிகளிலும் தொழிற்சங்க நடவடிக்கை நேற்று இடம்பெற்றது. ஒரு சில வங்கிக் கிளைகள் நேற்று திறக்கப்பட்டிருந்ததுடன், சில வங்கிகள் இயங்கவில்லை.

பணிப்பகிஷ்கரிப்பிற்கு இலங்கை மின்சார சபை ஊழியர்களும் ஒத்துழைப்பை வழங்கினர். (ம-7,9)

## யாழில்...

பால்நிலை சமத்துவத்திற்கான புதுமை தொழில்நுட்பம் எனும் கருப்பொருளில் 2023ஆம் ஆண்டுக்கான மகளிர் தினம் இடம்பெற்றது.

இதன்போது பல்வேறு துறைகளைச் சேர்ந்த பெண்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடக்குமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், மாவட்ட செயலாளர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் யாழ்ப்பான கலாசார மண்டப முன்றலில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சு மற்றும் வடக்கு மாகாண தொழிற்றுறைத் திணைக்களமும் இணைந்து நடத்திய மகளிர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றது. (ம-7,9)

## யாழிலிருந்து...

யத் துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் தெரிவித்தார்.

யாழ்.இந்தியத் துணைத்தூதரகம் மற்றும் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சும் இணைந்து ஏற்பாடு செய்த சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணம் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் சர்வதேச விமானம் நிலையம் ஊடாக மேற்கொள்ளப்படும் யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவையூடாக பலர் நன்மையடைந்து வருகின்றனர். இந்த சேவையை எப்படி நீடிப்பது என்று ஆராய்ந்து வருகின்றோம் என்றார். (ம-7,9,33)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 15/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1515
வெற்றி இலக்கங்கள்
மகரம் 3 8 2 6 9 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.15
சீட்டிழுப்பு இலக்கம் - 1090
B 27 34 56 65
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.15
சீட்டிழுப்பு இலக்கம் 3302
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
W 12 26 29 47
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 15/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1408
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
P 20 03 17 58 63

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.15
சீட்டிழுப்பு இலக்கம் 369
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 31 42 47 50 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/15
சீட்டிழுப்பு இலக்கம் 5060
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
C 8 0 6 3 7 3
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2035
நிறம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.03.15
தினம் புதன்கிழமை
X 05 10 21 65
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,903,040/-
DLB

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.15
சீட்டிழுப்பு இல : 4196
வர்ணம் : நீலம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,338,400/-
வெற்றி இலக்கங்கள்
09 16 45 53 C
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,448,538/-
திகதி 2023-03-15
வெற்றி வாரம் 3747
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 09 34 37 57
ரிஷபம்
7248
106
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,606,120/-
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
B 29 12 22 60 64
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1211
வர்ணம் இளநீலம்
திகதி 2023.03.15 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 313,643,488.20
DLB
Web : www.dlb.lk

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1905
சீட்டிழுப்பு திகதி 2023-03-15
வெற்றி இலக்கங்கள்
10 11 39 44 M
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 40,990,462/-
DLB
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1861
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.03.15
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,538,860/-
வெற்றி இலக்கங்கள்
31 32 50 61 J
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரவையில் மாற்றம்?

(கொழும்பு)

கடந்தசிலவாரங்களாக அமைச்சரவை மறுசீரமைப்புக்கு பல முன்னாள் அமைச்சர்கள் அழைப்பு விடுத்துள்ள நிலையில், அமைச்சரவை மாற்றம் குறித்த பேச்சு மீண்டும் எழுந்துள்ளது.

தற்போதைய அமைச்சரவையை மாற்றியமைப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாக முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர், அமைச்சரவை மாற்றத்துக்கு ஏற்ற நேரம் இதுவென்றும் தகுதியான பலர் தற்போது அமைச்சு இல்லாமல் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு முன்னர் புதிய அமைச்சரவை பதவியேற்பது சாத்தியமில்லை என்று அரசாங்கத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14889)

076 825 7716 (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தாவடியில் 3 பரப்பு காணி விற்பனைக்கு**

- மூன்று பரப்புக்காணி
- KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
- தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில்

(14913)

**076 436 5814**

## ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி புத்தூர்

**தரம் 6, 10 அனுமதி - 2023**

யா/ ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் தரம் 6, தரம் 10 (2023) வகுப்புக்களுக்கு (தமிழ், ஆங்கில மொழி மூலம்) புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்களை பாடசாலை நேரங்களில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பத்திற்கான இறுதித் திகதி : 2023.03.23

அதிபர்

021 205 8828

(C-6162)

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

EXECUTIVE OFFICER

- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6163)

V2 TRAVELS

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A ,சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: •கிளிநொச்சி •சுன்னாகம் •சாவகச்சேரி •மானிப்பாய் •நெல்லியடி •பருத்தித்துறை •திருகோணமலை •வல்வெட்டித்துறை •கோப்பாய் •புத்தூர் •பண்டத்தரிப்பு •சங்கானை •கொழும்பு (C-6163)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## வேலைவாய்ப்பு

கோண்டாவிலிற்கும் பலாலிக்கும் இடைப்பட்ட பகுதியிலான வேலைவாய்ப்பிற்கு அண்மையில் வசிக்கும் 45 வயதிற்கு மேற்பட்ட ஆண் விரும்பத்தக்கது. கல்வித் தகைமை தேவையில்லை.

அடிப்படை சம்பளம் 30,000 + கமிஷன்

தொடர்புக்கு :-

**070 700 0443**

(14907)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 60 பரப்பு காணி விற்பனைக்கு**

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14914)

**074 318 7263 | 076 755 8606**


# மரண அறிவித்தல்

## பொன் மதிமுகராஜா விஜயலட்சுமி



தோற்றம் 15.12.1948 மறைவு 15.03.2023

தாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன் மதிமுகராஜா விஜயலட்சுமி அவர்கள் நேற்று புதன் கிழமை (15.03.2023) அன்று இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்து - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பொன் மதிமுகராஜாவின் (TULF) (முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் செயலாளர் நாயகமும், அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும், சமாதான நீதவானும், திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும், முன்னாள் வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவரும்) அன்பு மனைவியும், சிவலிங்கத்தின் ஆசை அக்காவும், விஜயமதி, கஸ்தூரிமதி, விஜயகாந், விஜயவர்மன் ஆகியோரின் அன்பு தாயாரும், மதிக்காந், விஷானி, அரிகரன், விகாஸ்னி, அஜிகரன் ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.03.2023) பிற்பகல் 12.00 மணியளவில் கல்கிச மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கல்கிச இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"ஸ்ரீமுருகபவனம்"
தாவடி வடக்கு, கொக்குவில்.

தகவல் : பொன் மதிமுகராஜா விஜயகாந்த்
077 620 2077 / 077 368 6304

(C-6165)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.